முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
ராணி
காமிக்ஸ்
கொலைகாரக் குரங்கு
ரூ. 3

இறங்கி வா மழையே!

மழையே மழையே வானத்து மழையே!
மறைவாய் இருந்து மலைக்கச் செய்கிறாய்
ஏனோ மறைந்து இருக்கிறாய் மழையே!
நீ இல்லாமல் நீர் இல்லாமல்
நிலம் எல்லாம் வறண்டது நீர்நிலை காய்ந்தது!
குடிக்கக் குளிக்கத் துணிகள் துவைக்கத்
தண்ணீர் இல்லாமல் தவிக்கிறோம் மழையே!

ஆடுகள் மாடுகள் இரை இல்லாமல்
அலைந்து திரிந்து களைத்துப் படுக்கின்றன!
போதிய விளைச்சல் இல்லை என்றே
விலைகள் எல்லாம் மலையேறி விட்டன!
என் செய்வோம் மழையே இறங்கி வா மழையே!

—செல்வி இ. ஜீவா



மாணவர்களுக்கு ரூ. 6 ஆயிரம் பரிசு!

மாணவ — மாணவிகளே!

அடுத்த வகுப்புக்கு போகப் போகிறீர்கள்!

புதிதாகப் புத்தகம்— நோட்டுகள் வாங்க வேண்டுமே? அதற்கு உங்களுக்கு உதவி செய்ய "ராணி காமிக்ஸ்" முன்வந்திருக் கிறது!

உங்களுக்கு **ரூ. 6 ஆயிரம்** கொடுக்கப் படும்!

முழுவிபரத்துக்கு அடுத்த (மே—1) "ராணி காமிக்ஸ்" பாருங்கள்.

முகமூடிவீரர் **மாயாவி** தோன்றும் **"வஞ்சக எதிரி"** என்ற மர்மப் படக்கதை அடுத்த ராணி காமிக்ஸ்"சில் இடம் பெறுகிறது!

கால்பந்தாட்ட வீரர் குத்துச்சண்டை வீரரானார்!

உலகப் புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் மரடோனாவுக்கு கால்பந்து விளையாடி அலுத்துவிட்டதுபோலிருக்கிறது. எனவே, அவர் குத்துச்சண்டை மீதுமோகம்கொள்ளத்தொடங்கி விட்டார்.

கால்பந்தாட்ட குழுவில் அவர் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள். எனவே அவரை விளையாட விடவும் விடவில்லை. அந்த கோபத்தில் மரடோனா குத்துச் சண்டைக்கு போய்விட்டார் என்று பலரும் பேசிக்கொள் கிறார்கள்.

மரடோனா குத்துச்சண்டை கைஉறைகளை அணிந்துகொண்டு பயிற்சியை தொடங்கிவிட்டார். இப்போது அர்ஜென்டைனா முன்னாள் குத்துச்சண்டை வீரர் சாண்டோஸ் லாசியரோடு மோதப் போகிறார். மொத்தம் 3 சுற்று போட்டியில் முதல் இரண்டு சுற்றுகளில் மட்டும் இருவரும் முககவசம் அணிந்து மோதுகிறார்கள். கடைசிச் சுற்றில் மட்டும் இருவருக்கும் கவசம் கிடையாது.

மரடோனா குத்துச்சண்டையில் குதித்திருப்பது அவரது ரசிகர்களிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.



தாதாபாய் நவுரோஜி!

இந்தியாவின் தலைசிறந்த தேசபக்தர்களில் தாதாபாய் நவுரோஜியும் ஒருவர். நாட்டு மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, விடுதலைக்கு வித்திட்ட முக்கிய தல்லவர், இவர்.

தாதாபாய் பம்பாயில் பிறந்தார். இவர் சிறுவராக இருக்கும்

போதே தந்தை இறந்து விட்டதால், தாயின் பாதுகாப்பில் வளர்ந்தார். கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் தாதாபாய் ஆசிரியர் வேலையில் சேர்ந்தார். ஊதியம் பெறாமலே மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார். இந்திய மக்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் சில இயக்கங்களில் கலந்துகொண்டார். இவருடைய முயற்சியால் தான் இந்தியாவில் பெண்கள் பள்ளி முதல் முதலாக நிறுவப்பட்டது.

1855–ல் இலண்டனில் உள்ள இந்திய வ்ாணிக நிலையம் ஒன்றில் கூட்டு சேர தாதாபாய் இலண்டனுக்குச் சென்றார். அபின், ஒயின் முதலிய போதைப் பொருளை அந்த வாணிக நிலையம் வியாபாரம் செய்து வந்ததால் அப்பொருள்களில் வரும் வருவாயை வாங்கிக்கொள்ள தாதாபாய் மறுத்துவிட்டார்..பிறகு இலண்டனில்தானே ஒரு வாணிக நிலையத்தை தொடங்கினார். ஆனால் பெருத்த நட்டமடைந்தது. அவரது நண்பர்கள் அவருக்கு உதவி செய்ய வந்தார்கள். ஆனால் அவர்களது உதவியை தாதாபாய் ஏற்றுக்கெள்ளவில்லை. இந்திய மக்களின் நிலையை பத்திரிகைகள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் பிரிட்டிஷ் மக்களுக்கு விளக்கி புரிய வைத்தார்.

தாதாபாய் 1881–ல் இந்தியாவுக்கு திரும்பினார். இந்திய மக்களின் நலன்களைக் காப்பதற்காக அப்போது தொடங்கப்பட்ட இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். இந்திய மக்களின் நிலையை பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துரைக்க 1883–ல் "இந்தியாவின் குரல்" என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

தாதாபாய் 1886–ல் மீண்டும் இலண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் நாடாளுமன்றக்

தேர்தலில் தாதாபாய் வெற்றி பெறவில்லையென்றாலும் 1893—ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றார். பிரிட்டிஷ் நாடாளுமன்றதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழர் இவர்தான்.

1906—ம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த இந்திய தேசியக்காங்கிரஸ் மாநாட்டிற்கு தாதாபாய் தலைமை தாங்கிப் பேசும்போது இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். “பிச்சை கேட்கவில்லை, உரிமையைக் கேட்கிறோம்.” என்று முழங்கினார். அம்முழக்கத்தினால் நாடு முழுவதும் புத்துயிர் பெற்றது. தள்ளாத வயதிலும் இவர் இந்தியாவுக்காகப் போரிடுவதை நிறுத்தவில்லை. தாதாபாய் 1916—ம் ஆண்டு நோய்வாய்ப்பட்டுக் காலமானார்.

இராக்கெட் தளம்!

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, ஜெர்மனியின் வடக்கு பகுதியில் பால்டிக் கடலில் உள்ள உஸ்டம் தீவில் இருந்துதான் கிட்லர் வீ–2 ரக ஏவுகணைகளை லண்டன் நோக்கி வீசச் செய்து கதிகலங்க வைத்தார். அதன்பிறகு இந்த இராக்கெட் தளம் ரசியாவின் கடற்படை தளமாக செயல் பட்டது. அதன்பின்பு கிழக்கு ஜெர்மனியின் கடற்படைதளமாகவும் இருந்தது. தற்போது இந்த இராக்கெட் தளத்தை ஜெர்மனியின் சுற்றுலாத் தளமாக மாற்ற முடிவு செய்திருக்கிறார்கள்!



ராணி காமிக்ஸ் – 284
(மாதம் இருமுறை இதழ்)

TV

ஏப்ரல் 16 – 30
1996

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

கொலைகாரக் குரங்கு

பெங்காலியாவின் அடர்ந்த காட்டுக்குள் இருக்கும் மண்டைஓட்டுக் குகையில் மாயாவி இருந்தார்.
திடீரென்று ஒருநாள் ஈடன் தீவுக்கு சென்றுவர முடிவு செய்து ஹீரோ, டெவிலுடன் புறப்பட்டார்.
மாயாவி மிதவையில் ஹீரோவையும், டெவிலையும் ஏற்றிக்கொண்டு ஈடன் தீவுக்குச் சென்றார்.
டெவில்! முகத்தை தண்ணீருக்கு அருகில் கொண்டுபோகாதே!

மாயாவி ஈடன் தீவில் உள்ள மிருகங்களுடன் கொஞ்சி விளையாடினார்.
அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா?
மாயாவி அங்குள்ள மிருகங்களிடம் நலம் விசாரித்துவிட்டு, சிங்கம், புலி மீது ஏறி சவாரி செய்தார்.
இன்னும் வேகமாகப் போங்கள்!
சிங்கம், புலி மீது சவாரி செய்வது மாயாவிக்கு பிடித்தமான விளையாட்டு.
அந்த நேரம் மாயாவிக்கு அவசரச் செய்தி குரங்கு மூலமாக வந்து கொண்டிருந்தது.
குரங்கு கொண்டுவந்த அவசரச் செய்தி குரனிடம் ஒப்படைக்கப்பட்டது.
அவசரச் செய்திதான் குரங்கு மூலம் வரும்!
என்ன அவசரமோ தெரியவில்லையே?

குரன் நான் வேண்டுமானால் ஈடனுக்குச் சென்று மாமாவிடம் செய்தியை ஒப்படைத்துவிட்டு வருகிறேன்!


நான் ஜிம்போவுடன் ஈடன் தீவுக்குச் செல்கிறேன். துணைக்கு கட்டினாவும் வரட்டும்!
எச்சரிக்கையாப் போய் வா!

ரெக்ஸ் ஜிம்போவில் ஏறி ஈடன் தீவை நெருங்கினான்
ரெக்ஸ்! அந்த ஆற்றை நாம் எப்படிக் கடப்பது?
கடக்கவேண்டியது இல்லை! மாமாவே நம்மைத் தேடி வந்துவிடுவார்!

ஈடன் தீவில்— சிங்கம் தனக்கு தேவையான உணவை தானே பிடித்து சாப்பிட்டது. அதை மாயாவி வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்தார்.


அப்போது— ரெக்ஸ் அங்கே வந்தான். மாயாவி அவனைப் பார்த்தார்.
?
ரெக்ஸ் அக்கரையில் இருந்து குரல் கொடுத்தான்.


மாமா! உங்களுக்கு அவசரச் செய்தி வந்திருக்கிறது!
ரெக்ஸ்! நீ அங்கேயே இரு! நான் வருகிறேன்!

உடனே மாயாவி கம்பி வழியாக ஆற்றைக் கடந்தார்.
என்ன செய்தி ஆக இருக்கும்?
மாமா கம்பி வழியாக சறுக்கி வருவது வேடிக்கையாக இருக்கிறது அல்லவா?
ஆமாம்.
மாயாவி மிக வேகமாக சறுக்கி வந்தார்.
மாய..வி ரெக்சை நெருங்கினார்.

மாமா! குரங்கு மூலமாக அவசரச் செய்தி வந்திருக்கிறது!
பரவாயில்லை. காட்டுக்குள் தனியாக என்னைத் தேடி வந்துவிட்டாயே?


மாயாவி உடனே அந்தக் கடிதத்தை படித்தார்.
மாமா! நானும் கம்பி வழியாக இந்த ஆற்றைக் கடக்கமுடியுமா?
முடியும்! ரெக்ஸ் காலை ஆற்றுக்குள் வைக்காதே! மீன் கடித்துவிடும்! கலோனல் உராபுதான் இந்தக் கடிதத்தையும் போட்டோவையும் அனுப்பியிருக்கிறார்!
காட்டு இலாகாவினரா?


காட்டு இலாகா.
தலைமை நிலையம்.
கமாண்டருக்கு!
இத்துடன் போட்டோவில்
இருக்கும் புரொபசர் ஆலனும் அவர் மகள் எலீனாவும்
அனுமதி இல்லாமல் காட்டில் இருக்கும் மலைப் பகுதிக்கு
கெலிகாப்டரில் வருகிறார்கள். அவர்களை கவனித்துக்
கொள்ளவும்! இப்படிக்கு, கலோனல் உராபு.

காட்டிலாகா தலைமை அலுவலகம்.
சார்! நாங்கள் ஒருவரைத் தேடி காட்டுக்குள் செல்கிறோம்!
காட்டுக்குள் செல்ல யாருக்கும் அனுமதி கிடையாது!
சார்! முக்கிய வேலையாக செல்கிறோம்! அனுமதிக்க முடியுமா? முடியாதா?
உங்கள் மகளிடம் எடுத்துச் சொல்லுங்கள்! அது ஆபத்தான இடம்!
ஆபத்தை சந்திக்க தயாராக இருக்கிறோம்!
இரண்டு நாள் கழித்து, புரொபசர் ஆலனும், அவரது மகள் எலீனாவும் கெலிகாப்டரில் அனுமதி இல்லாமல் காட்டுக்கு புறப்பட்டார்கள்.
யாரைத் தேடி காட்டுக்குள் செல்கிறார்கள்!
இத்துடன் போட்டோவில் இருக்கும் புரொபசர் ஆலனும் அவர் மகள் எலீனாவும் அனுமதி இல்லாமல் காட்டுக்குள் கெலிகாப்டரில் வருகிறார்கள். அவர்களை கவனித்துக்கொள்ளவும்!
இப்படிக்கு, கலோனல் உராபு.

மா! என்ன செய்தி?
எதுவும் ஆபத்தா?
இல்லை ரெக்ஸ்! புரொபசர் ஆலனும், அவர் மகள் எலீனாவும் விதியை மீறி ஆபத்தான காட்டுக்குள் வருகிறார்களாம்!
அவர்களை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!
யாரைத் தேடி காட்டுக்குள் வருகிறார்கள் என்று தெரியவில்லைய்ய?
மாயாவிதிரும்பவும்கம்பியில் சறுக்கியபடியே ஈடன் தீவுக்குச் சென்றார்.

தீவில் இறங்கி, ஹீரோ, டெவிலை அழைத்துக்கொண்டு மிதவையில் ஆற்றைக் கடந்தார்.
நண்பர்களே! எனக்கு வேலை வந்துவிட்டது! உங்களை பிறகு சந்திக்கிறேன்! வரட்டுமா?
காட்டில் உள்ள மலைப்பகுதி என்றால் விஷ குள்ளர்கள் இருக்கும் ஆபத்தான இடமாச்சே!
மாயாவி ரெக்சுடன் மண்டைஓட்டுக் குகைக்குத் திரும்பினார்.
மாமா! நாங்களும் உங்களுடன் வரட்டுமா?
இல்லை ரெக்ஸ்! நீயும் டாமும் பள்ளிக்குச் செல்லுங்கள்!

மாயாவி உடனே புறப்பட்டார். கொதிக்கும் எரிமலை குழம்பு ஆறு வழியாக பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

அதே நேரம்– கலோனல் உராபு, ஜனாதிபதி லூகாவுக்கு தகவல் சொன்னார்.
சார்! நான் எவ்வளவு தடுத்தும் அவர்கள் கேட்கவில்லை! புறப்பட்டுவிட்டார்கள்!

புரொபசர் ஆலன் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அவரை காட்டுக்கு அனுப்பியது தவறு என்று ஜனாதிபதி சொல்லுகிறார்!
சார்! அவர்கள்தான் உங்கள் பேச்சைக் கேட்கவில்லையே!

அதனால்தான் உடனடியாக காட்டிலிருக்கும் கமாண்டருக்கு செய்தி அனுப்பி அவர்களை தேடச் சொல்லி இருக்கிறேன்!
புரொபசர் தன் மகளுடன் எதற்காக ஆபத்தான வேலையில் இறங்கி இருக்கிறார்! ஏதும் ஆபத்து நேர்ந்து விடக்கூடாது!
எரிமலைக்குழம்பு ஆற்றை கடக்க வேண்டும் என்பதால் டெவிலை ஹீரோ மீது ஏற்றினார், மாயாவி.
டெவில்! நெருப்பு ஆற்றில் கிடக்கும் பாறை வழியாக செல்லவேண்டும்! எச்சரிக்கை!
மாயாவி ஒவ்வொரு பாறையாக தாண்டினார். ஹீரோ அவரைத் தொடர்ந்தது.
ஹீரோ! அவசரப்படாமல் என் பின்னே வா!

மாயாவி நெருப்பு ஆற்றைக் கடந்து வந்தார். ஓர் இடத்தில்—
இங்கே என் நண்பர்கள் விசித்திரக் குள்ளர்கள் இருக்கிறார்கள்! அவர்களிடம் கேட்டுப் பார்க்க வேண்டும்!
உடனே மாயாவி துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கிச் சுட்டார்.
குகைக்குள் இருந்த குள்ள மனிதர்கள் துப்பாக்கிச் சத்தம் கேட்டு வெளியே வந்தார்கள்.
என்ன சத்தம்?
குள்ளர்கள் ஆளுக்கொரு பறவையில் பறந்து வந்தார்கள்.
வாருங்கள் மாயாவி!
வணக்கம் இளவரசே!
குள்ள இளவரசனும், இளவரசியும் மாயாவியின் தோளில் ஏறிக்கொண்டார்கள்.

மாயாவி! எங்களுக்கு வாக்கு கொடுத்தபடி எங்களை காணவந்தமைக்கு ரொம் மகிழ்ச்சி!
இளவரசே! நான் முக்கிய வேலையாக இவ்வழியாக வந்தேன்!
நாங்கள் உங்களை சந்தித்ததில் அதிக மகிழ்ச்சி அடைகிறோம்!
என் முன்னோர் இந்த விசித்திரக் குள்ளர் களைப் பற்றி நிறைய குறிப்புகள் எழுதி வைத்திருக்கி றார்கள்!
எங்களை அரக்கர்களிடம் இருந்து காப்பாற்றி இருக்கிறீர்கள்! நாங்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம்!
புரொபசர் ஆலன் என்பவரும் அவரது மகளும் இங்கே மலைப் பகுதிக்கு வந்திருக்கி றார்கள்!
அவர்கள் எந்திரப் பறவையில் வந்ததை நீங்கள் பார்த்தீர்களா?
அதோ அந்த பெரிய பாறைப் பகுதியில் இறங்கியது!
ஆமாம்! பயங்கர இரைச்சலுடன் ஒரு எந்திரப்பறவை பறந்து சென்றது!


நாங்கள் வானில் பறந்து அவர்கள் இருக்கும் இடத்தை தேட முடியும்! ஆனால் வல்லூறுகள் எங்களை விரட்டிக் கொன்றுவிடும்!


உங்களுக்கு உதவ முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது!
பரவாயில்லை! அவர்களை நானே தேடிக்கொள்ளுகிறேன்! நன்றி! வரட்டுமா?


மாயாவி பயணத்தை தொடர்ந்தார்.
புரோபசரும் அவரது மகளும் மலைக்கு வந்து விட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது!

இந்த வல்லூறு
களினால்தான்
விசித்திர குள்ளர்
களுக்கு ஆபத்து!


ஓர் இடத்தில்– பாறைக்குப் பின்னே இருந்து
சிலர் மாயாவியை நோட்டமிட்
டார்கள்.
??


சில காட்டு மிருகங்களும் உறுமின.


ஆனால், மாயாவி எதையும் கவனிக்காமல் புரொபசரை தேடுவதிலே
குறியாக இருந்தார்.
என்ன டெவில்!
ஏதோ உறுமல் சத்தம்
கேட்கிறதே! யாருக்கோ
ஆபத்து!
உர்...ர்...ர்
உர்....

வா, விரைந்து வா! என்னவென்று பார்க்கலாம்!
ஒரு திருப்பத்தில்—
இரண்டு பேரை கரடி தாக்குகிறதே!
உடனே டெவில் கரடியை நோக்கிப் பாய்ந்தது.
லொள்...! லொள்...!
உர்... உர்...!
டெவிலைக் கண்ட கரடி அவர்களை தாக்குவதை விட்டுவிட்டது.

உடனே மாயாவி துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கிச் சுட்டார்.
டுமீல்... டுமீல்...!
துப்பாக்கிச் சத்தம் கேட்டு கரடி நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்தோடி மறைந்தது.
அனாவசியமாக எந்த மிருகத்தையும் கொல்லக்கூடாது!
திடீரென்று பாறைக்குப் பின்னே இருந்து சிலர் வெளியே தலை காட்டினார்கள்.
?!
இவர்கள் எனக்கு நண்பர்களா? இல்லை எதிரிகளா?
அவர்களில் ஒரு பெண் மட்டும் பூங்கொத்துடன் மாயாவியை நெருங்கினாள்.

நன்றி! ரொம்ப நன்றி!

கரடியிடம் இருந்து எங்களை காப்பாற்றியதற்கு நன்றி!
பரவாயில்லை!


மனித நேயத்துடன் பழகுகிறார்களே?
ஆட்டுமந்தை ஓட்டும் நாடோடிக் கும்பல் இது'

மாயாவி அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார்.
எந்திரப் பறவையில் வந்த இருவரைத் தேடி இங்கே வந்தேன்!
ஆமாம் ஒரு எந்திரப்பறவை பறந்தது!
அந்த மலைப்பிரதேசத்தில் இறங்கியது என்று நினைக்கிறேன்!
அப்படியா?
அங்கே பயங்கர மிருகங்கள் இருக்கின்றன!
அவைகள் மனிதனையே ஏப்பம் விட்டுவிடும்!
பெரிதாக புசுபுசுவென்று முடியோடு இருக்கும்!


அங்கே போகாதே!
இல்லை நான் அவர்களைத் தேடணும்!
குதிரைக்கு தண்ணீர் காட்டிவிட்டு புறப்படுகிறோம்!

அந்த மலைபிரதேசத் துக்கா?
அது சாவை நோக்கிச் செல்லுமிடம்!
அங்கே வெண்புலி அதிகம்!


நாங்களும் உதவிக்கு வரலாம். ஆனால் மலைப்பிரதேசம் என்பதால்....!
பரவாயில்லை! நானே சமாளித்துக் கொள்ளுகிறேன்!

வெண்புலிக்கு மிகவும் பயப்படுகிறார்கள்! நல்லவர்கள். உபசரிக்கத் தெரிந்தவர்கள்!
மாயாவி மலைப்பிரதேசத்துக்கு வந்தார். அங்கே ஒரு கெலிகாப்டர் நின்றுகொண்டு இருந்தது.
ஆலன் வந்த கெலிகாப்டர்! அவரை எங்கே? எதுவும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ?
மாயாவி அங்கே இருந்து குரல் கொடுத்தார்!
அலோ! எங்கே இருக்கிறீர்கள்?
அப்போது ஒரு வெண்புலி மாயாவியைப் பார்த்தது.


திடீரென்று டெவில் குரைத்தது.
ஆலனையும் அவரது மகளையும் எங்கே?
லொள்...! லொள்...!


திடீரென்று மேலே இருந்த வெண்புலி மாயாவி மீது பாய்ந்தது. ஆனால், கண்இமைக்கும் நேரத்திற்குள் மாயாவி துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்.
டுமீல்...! டுமீல்...!

இதைக் கொல்லக் கூடாதுதான்! என்ன செய்வது?
ஓகே! இந்த சிறுத்தையைத்தான் வெண்புலி என்கிறார்களா?


திடீரென்று இன்னொரு இடத்தில் இருந்து அலறல் சத்தம் கேட்டது.
ஆ... அய்யோ... உதவி!

மாயாவி குரல்வந்த திசையை நோக்கி குதிரையை விரட்டினார்.
ஆ... உதவி!
வல்லூறு வேறு பறக்கிறதே?


அங்கே நடப்பதைப் பார்த்து மாயவி அதிர்ந்தார்.


அங்கே ஆலனும், எலீனாவும் இருந்தார்கள். அவர்களை வல்லூறுகள் விரட்டி விரட்டி தாக்கியது..
போ... விலகிப் போ...!


எலீனா நெருப்பை பற்றவைத்து வல்லூறுகளை விரட்டினாள்.
எலீனா! நீயாவது தப்பிச் சென்றுவிடு!
இல்லை அப்பா...!

அதோ நேரம் மாயாவியின் துப்பாக்கி உறுமியது.
டுமீல்...!
டுமீல்...!
துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் வல்லூறுகள் திசைக்கொன்றாக பறந்தன.

பயங்கரமான பறவைகள்! பேய் மாதிரி தாக்குகிறதே!
எலீனா! பறவைகள் போய்விட்டன!
என்பேர் உங்களுக்கு எப்படித் தெரியும்!
உன்னையும் உன் அப்பாவையும் தேடித்தான் நான் இங்கே வந்தேன்! காலில் அடிபட்டிருக்கிறதே!
எங்களைப் பற்றிக் கூறும் நீ யார்?
நான் உங்களுக்கு உதவ வந்திருக்கிறேன்!
நீங்கள் எதற்காக இந்த ஆபத்தான இடத்துக்கு வந்திருக்கிறீர்கள்!
அப்பா எதுவும் சொல்லாதீர்கள்!

எலீனா ! அவர் நம்மை காப்பாற்றி இருக்கிறாரே ?
ஒரு அரிய கண்டு பிடிப்பைத் தேடி வந்திருக்கிறோம் !
எதைத் தேடி !
எலீனா ! அந்த போட்டோவை இப்படிக் கொண்டா ?
அப்பா.... உங்கள் வாக்குறுதி என்னவாகி விட்டது !
எலீனா ! வந்த விமானம் நாசமாபோச்சு ! என் காலும் முறிந்துவிட்டது ! இப்ப இவரைவிட்டா உதவிக்கு வேறு ஆள் இல்லை !

இவர் அதைக் கண்டுபிடிச்சுத் தருவாரா?
இந்தாருங்கள் அப்பா போட்டோ!
இதற்காகத்தான நானும் என் மகளும் இங்கே வந்திருக் கிறோம்!
போன ஆண்டு என் வருங்கால மாப்பிள்ளையும் விஞ்ஞானியுமான பெல் ஒரு கண்டுப்பிடிப்புக்காக படம் எடுக்க இந்த காட்டுக்கு வந்தார.
இந்த இடத்தில் இரத்தம் உறையும்படியாக ஒரு போட்டாவை எடுத்தார்!
?
?!

அவர் திரும்பி வரும்பொழுது ஏதோ ஒரு நோயினால் செத்துவிட்டார்! இந்த போட்டோவேர்ட் பிலிம் மட்டும் எங்களிடம் வந்தது!
இதுதான் அவர் எடுத்த முதல் படம்!
சிறுத்தையுடன் மோதுவது எது?
அதைத்தான் தேடி வந்திருக்கிறோம்!

பார்த்தால் மனிதக்குரங்கு போல தெரிகிறது!
அப்பா! இந்த இரகசியத்தை ஏன் அவரிடம் சொன்னீங்க?
எலீனா! இனி இரகசியத்துக்கு இடமில்லை! உயிரோடு ஊர் திரும்ப வேண்டாமா?
ஆமாம்! நீ யாரு?
அதைவிடு! முதலில் நடந்ததை சொல்லுங்க!

இந்த படம் இந்த மலைபிரதேசத்தில் எங்கோ எடுக்கப்பட்டது!
பெல் எடுத்த இன்னொரு படம்! விமான சத்தத்தைக் கேட்டு இரண்டும் ஓடுது! ஆனால், மனிதக்குரங்கு ஓடுவது விசித்திரமாக இருக்கிறது!
அதைத் தேடித்தான் வந்திருக்கோம்! என் மாப்பிள்ளை பாதியில் செத்துட்டார்.

அதனால் என் மகள் அவர் சார்பில் இதைத் தேடுகிறாள்!
அதைக் கண்டுபிடித்து அவருக்கு பெருமை சேர்க்க நினைக்கிறாள்?
அப்படியா?
அதனுடைய கால் கையை பார்க்கும்போது சந்தேகமாகத்தான் இருக்கிறது!
?
அய்யோ... யோ...!
திடீரென்று எலீனாவின் கூக்குரல் கேட்டது.
அங்கே— அதே குரங்கு கையில் கட்டையுடன் எலீனாவை நெருங்கியது!
அய்யோ...!

ஏய்.... நீ பேசுவாயா? என்னைக் கொன்று விடாதே...
இல்லை என்னை எதுவும் செய்யாதே..
ஆ....என்னைத் தொடாதே! கொலைகாரக் குரங்கு!
எலீனா ஏன் கதறுகிறாள்?
டெவில்! வா என்னவென்று பார்ப்போம்!
மாயாவி குரல் வந்த திசையை நோக்கி ஓடினார்.

மாயாவி மேலே இருந்து பார்த்தார்.
இதைத்தான் தேடிவந்தோம். கிடைத்து விட்டது!
ஆமாம்! இதுதானா?
அந்த கொலைகாரக் குரங்கு எலீனாவை தோளில் தூக்கிக்கொண்டு சென்றது.
ஏய்... என்னை கீழே இறக்கிவிடு!
உடனே மாயாவி மேலே இருந்து கீழே குதித்தார். கூடவே டெவிலும் குதித்தது.


மாயாவியைக் கண்டதும் அந்தக் குரங்கு எலீனாவை கீழே தூக்கிப் போட்டது!
ஆ... அம்மா!


குரங்கு அவளை விட்டுவிட்டு மாயாவியுடன் மோதலுக்குத் தயாரானது.

அங்கே— ஆலன் நடக்கமுடியாமல் திணறித் திணறி ஊர்ந்து வந்தார்.
எலீனாவக்கு என்னாச்சு என்று தெரியவில்லையே?


அடச்சே! கால் ஒடிந்ததால் என்னால் நடக்கமுடியாமல் போய்விட்டதே?


ஆலனும் கீழே எட்டிப் பார்த்து அதிர்ந்துபோனார்.
ஆ...!


அப்பா! நாம் தேடியது இதுதான்!!
எலீனா உனக்கொன்றும் ஆபத்து இல்லையே?

மாயாவி துப்பாக்கியை எடுத்தார்.
வேண்டாம்! அதைச் சுடவேண்டாம்! அது எனக்கு உயிரோடு வேண்டும்!
இல்லை எலீனா! அது கொலைகாரக் குரங்கு! கொன்றுவிடனும்!
எலீனா உன் ஊகம் சரிதான்! இது மனிதன்தான்! அதனால் கொல்ல மாட்டேன்!
குரங்கு கம்பை ஓங்கிக்கொண்டு வந்தது. மர்யாவியைத் தாக்கியது.
அதற்குள் மாயாவி தன் தலையை வைத்து அதன் வயிற்றில் மோதினார்.

தன் முஷ்டியால் ஓங்கி ஒரு குத்து விட்டார்!


மாயாவி கடுமையாகத் தாக்கினார்.

மாயாவியின் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் குரங்கு தரையில் வீழ்ந்தது.
மாயாவி திடீரென்று 'கலகல'வென்று சிரித்தார்.

மாயாவி தன் வயிற்றைப் பிடித்துக்கொண்டு விலாநோக சிரித்தார்.
ஏன் இப்படி சிரிக்கிறார்? இவருக்கு என்னாச்சு!
இல்லை. இதன் உடம்பில் ஜிப்பைக் கண்டேன்!
குரங்குக்குள் இருந்தவன் குரங்கு உடையை கழற்றிபடியே வெளியே வநந்தான்.
உங்கள் கை இரும்பா என்ன?
ஏய்... குரங்கு வேடத்தில் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

சர்க்கசில் எனக்கு இந்த வேல்லதான். வேலை எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை! அதனால் துறவி வாழ்க்கை வாழ இந்த காட்டுக்கு வந்தேன்!

அருகில் ஆடு மேய்க்கும் இடையர்கள் இருப்பதால் எனக்கு சாப்பாட்டுக்கு வசதியாகிவிட்டது!

என்னை உண்மையிலேயே குரங்கு என நினைத்து தினமும் உணவும் பானமும் படைக்கிறார்கள்!

ஒருநாள் சிறுத்தை ஒன்று என்னைக் கொல்லப் பார்த்தது. அப்போது ஒரு விமானத்தின் சத்தம் கேட்டு சிறுத்தை ஓடிவிட்டது!
என் வருங்காலக் கணவர்தான் அந்த விமானத்தில் வந்து உன்னை படம் எடுத்தார்!
நிம்மதியாக வாழும் என் வாழ்க்கையை சிதைச்சிடாதீங்க!
இல்லை! இளைஞனான நீ ஏன் துறவியின் வாழ்க்கை வாழணும்?
நீ சிறையில் இருந்து தப்பி ஓடிய கைதி!
இல்லை! நான் என் மன நிம்மதியைத் தேடி இங்கே வந்தேன்!

என் துக்கத்தை மறக்க இங்கே வந்தேன் !
என்ன துக்கம் ?
ரோசி என்பவளை மறக்க.
ரோசியா ?
ரோசி என்னுடன் சர்க்கசில் வேலை செய்தாள் இருவரும காதலித்தோம்.

ஆனால், அவள் சர்க்கஸ் முதலாளியோட ஓடிப்போயிட்டாள்.
அலெக்ஸ்! நீ வெறும் கோமாளி! இவர் பெரிய இலட்சாதிபதி!
அதனால் குரங்கு உடையோடும் உடைந்த மனதோடும் துறவியா வாழ இங்கு வந்தேன்! நீங்கள் எதற்கு இங்கே வந்தீர்கள்?
என் வருங்கால கணவர் விட்ட பணியை தொடர வந்தேன்!

வந்த இடத்தில் உன்னைப் பார்த்தேன்!
!
உங்க பேர் என்ன சொன்னீர்கள்?
அலெக்ஸ்
இருவரும் அன்பை பரிமாறிக் கொண்டார்கள்.
மாயாவி கெலிகாப்டரில் இருந்த ரேடியோ மூலம் கர்னல் உராபுடன் தொடர்பு கொண்டார்.
உராபு! புரொபசர் ஆலனையும் அவரது மகளையும் அழைத்துப் போக உடனே ஒரு கெலிகாப்டரை அனுப்புங்கள்!
அந்த இடம் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை!


ஆபத்துக்கு பாவமில்லை! உடனே அனுப்புங்கள்!

ஆலனையும், எலீனாவையும் கூட ஒருவரையுமா? ஆலனுடன் இன்னொருவரா?
ஆமாம்!


ஆலன்! உங்கள் ரேடியோவுக்கு ஆபத்து இல்லை. முதலிலே உதவியைக் கோரியிருக்கலாமே?
என் மகள் இரகசியமாக ஆராய வேண்டும் என்றாளே?

என் மகள் எலீனாவை எங்கே?
அலெக்சோடு கைகோர்த்துக்கொண்டு செல்கிறாள்!
தன் அன்பரின் ஆசையை நிறைவேற்ற வந்தவளுக்கு புதிய துணை கிடைத்து விட்டது.
உடைந்த மனதோடு காட்டைச் சுற்றிவந்த அலெக்சுக்கு அன்பைப் பறிமாற எலீனா கிடைத்துவிட்டாள்


அதோ உங்களை அழைத்துச் செல்ல கெலிகாப்டர் விமானம் வந்துவிட்டது!
நீங்கள் எங்களுடன் வரவில்லையா?
இல்லை!

பிரிந்து வாழும் இருவரை ஒன்றாக சேர்ததுவைத்ததில் பெருமைகொள்கிறேன்!
(முடிந்தது)

தங்கக் கிளி

அமுதா கணேசன்

6

முன்கதை சுருக்கம்:-

சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, தற்கொலைக்கு முயன்ற ஒரு இளைஞனை காப்பாற்றினான். தற்கொலைக்கான காரணத்தை தெரிந்துகொண்டு அவனுக்கு உதவ முயன்றான், மாயன். ஆனால், இளைஞனுக்கும், மாயனுக்கும் வாக்குவாதம் முற்றியது. விருப்பம் இல்லாத எந்தப் பொண்ணையும் உங்களால் விரும்ப வைக்க முடியாது என்று இளைஞன் கூறினான். உடனே மாயன் சவாலை ஏற்று, காரியத்தில் இறங்கினான். எழில்புரி நாட்டின் இளவரசி பொற்செல்வியை விரும்பி, அவளை பெண் கேட்க, மாயன் எழில்புரி சென்றான்.

மறுநாள் மதியம்.

இளவரசி பொற்கொடிக்குப் பசித்தது. பட்டினி கிடந்து செத்து விடலாமா என்று நினைத்தாள். ஆனால் கல்லாக இருப்பவர்களை மீட்கவேண்டிய கடமை தனக்கு இருப்பதை நினைத்துக்கொண்டாள்.

அவர்களை மீட்பது எப்படி?

அவர்களைக் கல்லாக்கிய மந்திரவாதி ஒருவனால்தான் அது முடியும்.

அந்த மந்திரவாதியோ இளவரசியை விரும்புகிறான். இளவரசி அவனுக்கு மாலையிட்டால்தான் அவன் இவர்களை உயிர் பெற்று எழச் செய்வான்.

இது தவிர வேறு வழி இல்லை. ஆனால் மந்திரவாதி வந்து, “உங்கள் மகளை மணமுடித்து கொடுங்கள்” என்று கேட்டபொழுதே, “முடியாது”

என்று மன்னர் மறுத்துவிட்டார். மன்னரே மறுத்துவிட்ட ஒருவனுக்கு இளவரசி மாலையிடத் தயாராக இல்லை. அது தந்தையின் விருப்பத்துக்கு விரோதம் அல்லவா? பெற்று வளர்த்த தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக நடக்கக்கூடாதே!

இளவரசிக்கும் அவனைப் பிடிக்கவில்லை. தாடியும் கீடியுமாக ஆள் அசிங்கமாக இருக்கிறான். ஆளைப் பார்த்தால் வீரனாகவும் தெரியவில்லை. அதுமட்டுமா? ஒரு நாட்டு மக்கள் அத்தனை பேரையும் கல்லாக்கிவிட்டானே! அவன் எவ்வளவு கொடிய கல்மனம் உடையவனாக இருந்தால் இப்படிச் செய்வான்? அவனை நினைத்துப் பார்க்கவே இளவரசிக்கே வெறுப்பாக இருந்தது.

மக்களை மீட்க வேறு என்ன வழி?

இளவரசிக்கு அப்பொழுது வேறு ஒன்றும் தோன்றவில்லை. "காலம் வரும். அதுவரை காத்து இருக்கவேண்டியதுதான்" என்று நினைத்துக் கொண்டாள். காத்து இருக்கும் காலம் வரை, அவள் உயிர் வாழ வேண்டும். அதற்கு சாப்பாடு தேவை. கிளியாக இருக்கும் அவளுக்கு பழங்களும் கொட்டைகளும்தான் உணவு. அவள் நாட்டிலோ, மரங்களும் மரங்களில் கிடந்த பழங்களும் கூட கல்லாகிவிட்டன. அவள் எதை சாப்பிடுவது?

அவளது நாட்டைத் தாண்டி, பெரிய காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளில் பழ மரங்கள் உண்டு. அந்த மரங்கள் நிச்சயம் கல்லாகி இருக்காது. எனவே, அங்கேதான் போக வேண்டும்.

இளவரசி விர் என்று சிறகடித்துப் பறந்து போனாள். அந்தக் காடு வெகு தூரத்தில் இருந்தது. அங்கே சுவையான பழங்கள் இருந்தன. அவற்றைத் தின்று இளவரசி பசியாறினாள். பிறகு மீண்டும் தனது நாட்டுக்குப் பறந்து வந்தாள்.

நாள்தோறும் இதேபோல நடந்தது. காலையிலும் மாலையிலும், ஏதாவது ஒரு காட்டுக்கு இளவரசி பறந்து போவாள், பழங்களைத் தின்பாள். திரும்ப வந்து அரசரின் கையில் அமர்ந்துகொள்வாள். இப்படியாக நாளும் பொழுதும் கழிந்துகொண்டு இருந்தன.

ஒரு மாதம் கழிந்தது!

ஒருநாள் இரவு புயல் காற்று அடித்தது! காற்றைத் தொடர்ந்து பேய்மழை பெய்தது. பயங்கர காற்றில் கல்லாக இருந்த மரங்கள் கூட சாய்ந்துவிட்டன.

மறுநாள் காலையில் வழக்கம் போல இளவரசி ஒரு காட்டுக்குப் போனாள். அங்கே ஏராளமான மரங்கள் புயலில் விழுந்து கிடந்தன. இருந்த ஒரு சில மரத்திலும் பழங்கள் உதிர்ந்துவிட்டன. எனவே இளவரசி வேறு காட்டைத் தேடி வெகு தூரம் செல்ல வேண்டியதாகிவிட்டது.

அந்தக் காட்டில் ஒரு மரத்தில் அமர்ந்து பழங்களைக் கொத்திக் கொண்டு இருந்தாள். அப்பொழுது ஒரு சிங்கம் பயங்கரமாக அலறும்

ஓசை கேட்டது.

அந்த ஓசை தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. சிங்கம் போரிடுவது போலத் தோன்றியது.

"என்ன நடக்கிறது?" என்பதைப் பார்ப்பதற்காக இளவரசி பறந்து போனாள்.

காட்டின் உள்ளே சற்று தூரத்தில் ஒரு சிங்கத்துடன் ஓர் இளைஞன் சண்டை போட்டுக்கொண்டு இருந்தான். மிகவும் பயங்கரமான சண்டை. இளைஞனை சிங்கம் அடித்தது, சிங்கத்தை இளைஞன் தாக்கினான். இளைஞன் உடலில் சிங்கம் கீறி குருதி கசிந்துகொண்டு இருந்தது. முகத்திலும் இரத்தம். அப்படியிருந்தும் அவன் சிங்கத்துடன் வீரத்தோடு சண்டை போட்டுக்கொண்டு இருந்தான்.

இளவரசி ஒரு மரத்தில் அமர்ந்து பார்த்துக்கொண்டு இருந்தாள்.

சண்டை நடந்த இடத்தைச் சுற்றிலும் இருபது முப்பது வீரர்கள் நின்றார்கள். அவர்கள் கையில் வில், அம்பு, கத்தி முதலியவை இருந்தன. சிலர் தாரை, தப்பட்டை வைத்திருந்தார்கள். எல்லோரும் வேட்டைக்கு வந்தவர்களா?

அந்த இளைஞனைப் பார்த்தால், இளவரசனைப் போலத் தோன்றினான்.

காட்டை அடுத்து ஒரு நாடு இருக்க வேண்டும். அந்த நாட்டின் இளவரசன் போலிருக்கிறது. வேட்டைக்கு வந்த இளவரசன் சிங்கத்திடம் சிக்கிக்கொண்டானா?

அவனுடன் வந்த வீரர்கள் ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்?

கத்தி இருக்கிறது. ஈட்டி இருக்கிறது. வில் அம்பு இருக்கின்றன. சிங்கத்தை ஒரே அடியில் வீழ்த்திவிடலாமே!

இளவரசிக்கு எதுவும் புரியவில்லை.

சண்டை உச்சக்கட்டத்தை அடைந்தது. அப்பொழுது சிங்கமும் மத யானையும் சண்டை போடுவது போல இருந்தது. இளவரசன் வீரத்தைப் பார்த்து, இளவரசி மகிழ்ந்தாள்.

இளவரசன் சிங்கத்தின் வாலைப் பிடித்து, தூக்கி "கிர்" என்று சுற்றினான், சிங்கத்தை கீழே தள்ளி, அதன் மீது ஏறி அமர்ந்து "கும்... கும்..." என்று குத்தினான். கடைசியாக சிங்கத்தின் வாயைப் பிளந்தான்.

"கொர்" என்று அலறிக்கொண்டே சிங்கம் செத்தது. சுற்றிலும் நின்ற வீரர்கள் ஓடிவந்து, இளவரசனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

"ஊருக்குள் வந்து பயிர்களை நாசம் செய்து, உயிர்களையும் கொன்று தின்ற சிங்கத்தை கொன்றுவிட்டீர்கள் இளவரசே. இனிமேல் நகரத்து மக்கள் பயமின்றி வாழ்வார்கள்" என்று ஒருவன் பாராட்டினான்.

"உங்கள் உடம்பு முழுவதும் புண்ணாகிவிட்டது. இளவரசே

ட்டியால் ஒரே குத்து குத்தி, சிங்கத்தைக் கொன்று இருக்கலாம்" என்று ன்னொருவன் சொன்னான்.

"அது வீரம் அல்ல. சிங்கத்திடம் ஆயுதம் எதுவும் இல்லை. யுப்பொழுது நானும் சிங்கத்துடன் வெறுங்கையால்தான் போரிட வண்டும், அதுதான் சுத்த வீரம்" என்று இளவரசன் கூறினான்.

அவர்களது பேச்சை கேட்டதும் இளவரசிக்கு எல்லாம் புரிந்து ிட்டது. ஊருக்குள் வந்து உயிரையும் பயிரையும் நாசப்படுத்திய ிங்கத்தை வேட்டையாட இளவரசன் வந்து இருக்கிறான். தான் ருவனே தனியாக சிங்கத்துடன் போராடி அதைக் கொன்று ருக்கிறான்.

இளவரசனின் வீரத்தை இளவரசியும் பாராட்டினாள். அப்பொழுது வளுக்கு திடீர் என்று ஒரு யோசனை தோன்றியது.

இளவரசனும் அவனுடன் வந்த வீரர்களும் குதிரையில் திரும்பிப் போய்க்கொண்டு இருந்தார்கள்.

வெற்றி வீரனைப் போல, இளவரசன் முதலில் போனான். அவன் குதிரை வெள்ளை வெளேர் என்று அழகாக இருந்தது; அது மிகவும் மிடுக்குடன் நடந்து சென்றது. குதிரை மீது இளவரசன் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்தாலே, அவன் ஒரு மாவீரன் என்பது நன்றாகத் தெரிந்தது. நல்ல உயரம். தேக்கு மரம் போன்ற உடம்பு, விரிந்து பரந்த மார்பு, உயர்ந்த தோள்கள். மீசையை முறுக்கிவிட்டு இருந்தான். அவன் இடுப்பில் வாள் தொங்கியது.

அவனுக்குப் பின்னே வீரர்கள் குதிரையில் சென்றார்கள். அவர்களிடம் அம்பும் வில்லும் ஈட்டியும் வாளும் இருந்தன.

மரத்தில் அமர்ந்திருந்த இளவரசிக்கு திடீர் என்று ஒரு யோசனை தோன்றியது அல்லவா? உடனே, அவள் இளவரசன் எங்கே போய்க் கொண்டிருக்கிறான் என்று தலையை நிமிர்ந்து பார்த்தாள். அடர்ந்த காடாக இருந்ததால், அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனால் குதிரைகளின் காலடி ஓசை "டக்... டக்..." என்று நன்றாகக் கேட்டது.

இளவரசி "விர்" என்று பறந்து போனாள்.

சற்றுத் தூரம் சென்றதுமே இளவரசன் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவன் பின்னேயே இளவரசி பறந்து போனாள்.

காட்டைக் கடந்து ஓர் ஊருக்குள் இளவரசன் வந்தான்.

அந்த ஊர் சிறியதாக இருந்தது; ஆனால் செழிப்பாகக் காணப்பட்டது. மக்கள் சிரித்த முகத்துடன் தெருவில் சென்றுகொண்டிருந்தார்கள். பெண்கள் அழகாக ஆடை உடுத்தியிருந்தார்கள்.

இளவரசனைப் பார்த்ததும் தெருவில் சென்றுகொண்டிருந்த ஆண்களும் பெண்களும் நின்று, "வணக்கம்" செலுத்தினார்கள். இது மக்கள் அவன் மீது வைத்திருக்கும் அன்பையும் மரியாதையையும்

வெளிப்படுத்தியது.

இளவரசன் சிங்கத்தை அடித்துக் கொன்ற செய்தியைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். "இளவரசன் வாழ்க" என்று முழக்கமிட்டார்கள். இளவரசன் புன்னகைத்தபடி போனான். வீதிகளைக் கடந்து இளவரசன் அரண்மனையை அடைந்தான்!

இளவரசியும் அவன் பின்னாடியே பறந்து போனாள்.

இளவரசியின் அரண்மனை மிகப் பெரியது; ஆனால் இது சிறியதாக இருந்தது. "ஒரு சிற்றரசனின் அரண்மனை போல காணப்படுகிறது" என்று இளவரசி நினைத்தாள்.

அவளது எண்ணம் தவறு அல்ல. அது ஒரு சிற்றரசுதான். அந்த நாட்டுக்கு சிங்கபுரி என்று பெயர். சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுடைய மகன்தான் இந்த இளவரசன்.

இளவரசனின் பெயர் அஞ்சாநெஞ்சன். பெயருக்கு ஏற்றபடி, அச்சம் என்பதையே அறியாதவன். துணிச்சல் நிறைந்தவன். பல போர்க் களங்களில் படை நடத்திச் சென்று வெற்றி பல குவித்து இருக் கிறான். வீர விளையாட்டுகளிலும் வேட்டையிலும் விருப்பம் உள்ளவன். இவனது காலத்தில் சிங்கபுரி ஒரு பேரரசு ஆகும் என்று இப்பொழுதே மக்கள் பேசிக்கொள்கிறார்கள்!

தன்னுடன் வந்த வீரர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு அரசரைக் காண அஞ்சாநெஞ்சன் சென்றான்.

அவன் பின்னேயே இளவரசியும் பறந்து போனாள். யாரும் தன்னைப் பார்க்காதபடி மறைந்து மறைந்து சென்றாள்!

"வா, அஞ்சாநெஞ்சா" என்று மகனை அரசர் வரவேற்றார்!

அப்பொழுதுதான் இளவரசனின் பெயர் அஞ்சாநெஞ்சன் என்பதை இளவரசி பொற்கொடி அறிந்தாள்! "பொருத்தமான பெயர்" என்று அவள் அகமகிழ்ந்தாள்.

அஞ்சாநெஞ்சன் காட்டில் தனியே சிங்கத்துடன் போரிட்டு, அதை வென்ற செய்தியை ஏற்கனவே ஒரு வீரன் வந்து அரசனுக்குத் தெரிவித்து இருந்தான். மகனின் வீரத்தை அரசன் பாராட்டினான்.

"உனக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டு இருக்குமே! போய் மருந்து போட்டுக்கொண்டு, ஓய்வு எடுத்துக்கொள்" என்று அரசர் சொன்னார்.

"சரி, அபபா!" என்று கூறி, இளவரசன் விடை பெற்றுக்கொண்டான்.

(தொடரும்)

ராணிசிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

பாம்புகள் ஜாக்கிரதை!



நாய் வீட்டைக் காக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கேரி நாட்டில் பாம்புகளை காவலுக்கு வைக்கப் போகிறார்கள். அங்கேரி நாட்டின் தலைநகரம் புடாபெங்கு நகரில் கொள்ளை, திருட்டு மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது. அதனால் அங்குள்ள கண்காட்சி சாலை (மியூசியம்), நகை கடை, வங்கி ஆகியவற்றுக்கு இரவு. வந்துவிட்டாலே கிலிபிடித்து விடும்.

எனவே அங்கு வாழும் அடில்லா டோரக் என்பவருக்கு புதிய யோசனை ஒன்று தோன்றியிருக்கிறது. அதாவது கண்காட்சி சாலை (மியூசியம்), நகை கடை, வங்கிகளை மூடிவிட்டு செல்லும் போது உள்ளே நச்சுப் பாம்புகளை விட்டுவிட்டு, வெளியே "பாம்புகள் ஜாக்கிரதை" என்ற போர்டை தொங்க விட்டு விட்டால், திருடர்கள் இந்த வாசகத்தை படித்துவிட்டு தலைதெறிக்க ஓடிவிடுவார்களே" என்கிறார். அதனால் அடில்லா வெளிநாடுகளில் இருந்து நச்சுப் பாம்புகளை இறக்குமதி செய்து வருகிறார்!

டைனோசர் முட்டை கடத்தல்!

உலகில் அதிக அளவில் டைனோசர் முட்டை கிடைக்கும் நாடு மங்கோலியா. அதைப்போல மங்கோலியாவின் அண்டை நாடான சீனாவிலும் டைனோசர் முட்டை அதிகமாக கிடைக்கின்றன.

சீனாவின் சென்சென் பகுதியில் வந்துகொண்டிருந்த ஒரு சரக்கு லாரியை நிறுத்தி சோதித்துப் பார்த்ததில் லாரியின்

மேற்பரப்பில் மட்டும் பொம்மைகள் இருந்திருக்கின்றன. ஆனால் உள்ளே குடைய குடைய 78 டைனோசரின் அபூர்வ முட்டைகள் கிடைத்திருக்கின்றன. ஏற்கனவே சீனாவில் டைனோசர் முட்டை விற்பனைக்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது. எனவே இந்த முட்டைகளை போலீசார் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

எலியுடன் வாழும் அதிசயப் பெண்!

பொதுவாக வீடுகளில் நாய், பூனை, கிளி, புறா, மைனா போன்றவற்றை செல்லப் பிராணிகளாக வளர்ப்பார்கள். ஆனால், பிரான்சு நாட்டில் வாழும் ஒரு பெண் எலிகளை செல்லமாக வளர்த்து வருகிறார். அதுவும் ஒன்று இரண்டல்ல, ஆயிரக்கணக்கில் எலியை வளர்க்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட பிரான்சு போலீசார் அந்த பெண்மணியின் வீட்டுக்குச் சென்று சோதனை செய்து பார்த்து, அதிர்ந்துபோய்விட்டார்கள். நஞ்சானும் குஞ்சானுமாக வீடு முழுக்க எலிகள் கொட்டமடித்துக் கொண்டிருந்தன.

அதுமட்டுமில்லாமல், அந்தப் பெண் வளர்த்து வந்த பூனையை இந்த எலிகள் விரட்டிக் கடித்துக் கொண்டிருந்தன. எலிகளுக்கு உணவாக தினமும் 15 கிலோ தானியம் செலவிடுகிறார்.

இவர் பிளேக் பெண்மணியாக மாறிவிடுவாரோ என்ற பயத்தில் போலீசார் அவரை மருத்துவ மனையில் சேர்த்துவிட்டனர். எலிகளையும் கூண்டோடு அழிக்க போலீசார் முயன்று வருகிறார்கள்.

ஆத்திரக்காரன்

அழகாபுரி நாட்டு அரசன் மிகவும் அவசரக்காரன். நிதானம் ல்லாதவன். அவன் பக்கத்து நாட்டின் மீது படை எடுத்தான்.

கோட்டையைக் கைப்பற்ற நினைத்தான். ஆனால் போரில் தோற்று போனான்.

தோற்றுப்போன அரசன் காட்டுக்குள் ஓடி ஒளிந்தான். பல நாள் பசியால் வாடினான். உடம்பு மெலிந்து போனான்.

ஒரு நாள் காட்டில் ஒரு குடிசையைப் பார்த்தான். குடிசையில் ஒரு கிழவி சோறு ஆக்கிக்கொண்டு இருந்தாள். அவளிடம் தனக்கு மிகவும் பசிப்பதாகச் சொன்னான்.

கிழவி ஒரு தட்டில் சோறு போட்டு குழம்பு ஊத்திக் கொடுத்து, அரசனைச் சாப்பிடச் சொன்னாள். அவன் அரசன் என்று கிழவிக்குத் தெரியாது.

அரசனுக்கு பயங்கரப் பசி. அவசர அவசரமாக சாப்பிட ஆரம்பித்தான். சோற்றின் நடுப்பகுதியில் கை வைத்தான். கை வைத்ததும் "ஆ... சுடுதே" என்று அலறினான்.

கிழவி திட்டினாள். "அந்த முட்டாள் அரசன் மாதிரி நீயும் ஒரு அவசரக் குடுக்கை" என்றாள். அரசன் முழித்தான்.

"சோறு சாப்பிடும்போது ஓரத்தில் இருந்து சாப்பிடணும். பிறகு நடுப்பகுதிக்குப் போகணும். இல்லாட்டி கைசுடும். அதைப் போல நாடு பிடிக்கும்போது எல்லையில் இருக்கிற பகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாக வெற்றி கொள்ளணும். பிறகு கோட்டையைப் போய்ப் பிடிக்கணும். ஆனால் நம்ம அரசன் நேராக் கோட்டையைப் பிடிக்கப் போய் தோற்றுப் போனார். அவசரக்கார அரசன்" என்றாள் கிழவி.

இப்போது அரசனுக்கு புத்தி வந்தது. கிழவியை கும்பிட்டு விட்டு விடைபெற்றான். புத்தி தெளிவோடு தன் நாட்டுக்கு புறப்பட்டான்.

சும்மாவா சொன்னார்கள் அந்தக் காலத்தில். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு; பதறாத காரியம் சிதறாது என்று!

கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

கீழே 1—ல் இருந்து 27 வரை புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் புள்ளிகளை இணைத்தால் ஒரு பூச்சி கிடைக்கும். அது எது கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



அமுத்த காமிக்ஸ்

கோடை மலர்!

முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்

வஞ்சக எதிரி

காணாமல்போன வைர நெக்லஸைத்
தேடிப் புறப்படுகிறார்,
முகமூடி வீரர் மாயாவி!

பரபரப்பூட்டும் படக்கதை!

அதிக பக்கங்கள்!
ஆனால் அதே விலை!!

மே 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

கோடை மலர்!

அடுத்த "ராணி காமிக்ஸ்" (மே 1-ந் தேதி) இதழ் கோடை மலராக வெளிவருகிறது!

மாணவ - மாணவிகள் கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழிக்க வேடிக்கை வினோத செய்திகள், துணுக்குகள், விளையாட்டுக் கணக்குகள், பரிசு போட்டிகள் போன்றவை கோடை மலரில் இடம் பெறுகின்றன.

80 பக்கம்! ஆனால், விலை ரூ. 3/-

முகமூடிவீரர் மாயாவி தோன்றும் விறுவிறுப்பான மர்மப் படக்கதை இந்தக் கோடை மலரில் இடம் பெறுகிறது!

இப்பொழுதே உங்கள் பிரதிக்கு கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்!

பரிசுபெற்ற படங்கள்!

–மு. அழகு, தஞ்சாவூர்.

–ஜெ. ஜெகி, திருச்சி-4.



–எம்.எஸ்.எஸ். ஜெகநாதன்,
வேதாளை.

–மு. அப்துல்அக்கீம்.
தாராபுரம்.

TAMIL FORTNIGHTLY
Registered as Newspaper in Sri Lanka